# இலங்கையில் தமிழ்த் தேசியவாதத்தின் வளர்ச்சியில் தமிழ் அரசுக் கட்சியின் வகிபங்கு

சி. திருச்செந்தூரன்[1*]

அரசறிவியலில் இருபத்தோராம் நூற்றாண்டில் அதிக கவனிப்பைப் பெற்ற எண்ணக்கருக்களில் ஒன்றாக தேசியவாதம் காணப்படுகின்றது. பல்வேறு நாடுகளில் இடம்பெறுகின்ற அரசியல்ரீதியான மாற்றங்களுக்கும், பிரச்சினைகளிற்கும் தேசியவாத சிந்தனை அடிப்படையாக அமைகிறது. தேசியவாத சிந்தனை வளர்ச்சியின் ஒரு பகுதியாக உப தேசியவாதங்கள் தோற்றம் பெறுகின்றன. இலங்கையில் அந்நியராட்சியின் முடிவில் பௌத்த சிங்கள தேசியவாதத்தின் எதிர்விளைவாக தமிழ்த் தேசியவாதம் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. இவ் ஆய்வானது தமிழ்த் தேசியவாத வளர்ச்சியில் தமிழ் அரசுக் கட்சியின் பங்களிப்புக்களை வெளிக்கொணர்தல், சோல்பரி அரசியல் சீர்திருத்தக் காலப்பகுதியில் தமிழ்த் தேசியவாத போக்கினை மதிப்பீடு செய்தல் மற்றும் தமிழ்த் தேசியவாதம் எதிர்கொண்ட நெருக்கடிகளை வெளிக்கொணர்தல் போன்றவற்றை பிரதான நோக்கங்களாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இந்துமதப் புனருத்தான இயக்கத்தின் ஊடாக தமிழ்மொழியை முன்னிறுத்தி வளர்த்த தமிழ்த் தேசியவாத சிந்தனை 1921இல் சேர். பொன். அருணாசலம் தமிழர் மகாஜனசபை அமைத்ததைத் தொடர்ந்து தனி வழி அரசியலை நோக்கி முன்நகர்ந்தது. 1924ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் இதற்குப் பலம் சேர்ப்பதாக அமைந்தது. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் பின்னர் 1949இல் தோற்றுவிக்கப்பட்ட தமிழ் அரசுக்கட்சி சுதந்திரத்தின் பின்னராக தமிழ்த்தேசியவாத வளர்ச்சியின் ஊற்றாக அமைந்திருந்தது. தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்றத்திற்கு வெளியேயான மக்கள்மயப்பட்ட போராட்டங்கள், பாராளுமன்றத்திற்கு உள்ளேயான மக்கள் பிரதி நிதிகள்மயப்பட்ட போராட்டங்கள் என்ற பிரதான இரு உத்திகள் மூலம் தமிழ்த்தேசியவாத வளர்ச்சியை ஏற்படுத்தியது. பாராளுமன்றத்திற்கு வெளியே முன்னெடுக்கப்பட்ட காலிமுகத்திடல் சத்தியாக்கிரகப் போராட்டம், சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம், திருமலை யாத்திரை, தமிழரசு தபால்தலை வெளியீடு, ஒத்துழையாமைப் போராட்டங்கள், கறுப்புக்கொடிப் போராட்டங்கள் போன்றன தமிழ்மொழி பேசுவோரின் பிரச்சினைகளை வெளி உலகிற்கு கொண்டுவந்த அதேவேளை தமிழர்களை தமிழ்த் தேசியவாதம் என்ற ஒற்றை மையத்தில் அணிதிரள்வதற்குரிய சூழலை ஏற்படுத்தியது. எஸ்.ஜே. வி. செல்வநாயகம், ஈ. எம்.வி.நாகநாதன், கு.வன்னியசிங்கம், எஸ்.இராஜவரோதயம், அ.அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் வீச்சான தமிழ்த் தேசியவாதப் போராட்டங்களை முன்னெடுத்ததன் காரணமாக எல்லையற்ற நெருக்கடிகளையும், தடுப்புக்

[1]அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
Sthiruchchenthuran@yahoo.com

காவல்களையும் எதிர்நோக்க வேண்டிஏற்பட்டது. இத்தகைய தமிழ்த் தேசியவாத வளர்ச்சியில் தமிழ் அரசுக்கட்சியின் வகிபங்கை மதிப்பீடு செய்யும் நோக்கில் இவ் ஆய்வு முன்னெடுக்கப்படுகிறது.

*திறவுச்சொற்கள்: தமிழ்த் தேசியவாதம், தமிழ் அரசுக்கட்சி, போராட்டம், பாராளுமன்றம்.*